டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

agridoctor.in | 23.05.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 32 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 277 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# காடுகளும் வன விலங்குகளும் பேச முடியாதவை

## இந்திய வனப்பணி அதிகாரிகளுடனான கூட்டத்தில் மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ் உரை

புது தில்லி, மே 22

மத்திய சுற்றுச்சூழல், வனம், காலநிலை மாற்றத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், புதுதில்லியில் நடைபெற்ற இந்திய வனப்பணி அதிகாரிகளுக்கான இடைக்காலப் பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்வில் மத்திய சுற்றுச்சூழல், வனம், காலநிலை மாற்றத் துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங், அமைச்சகத்தின் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் பேசிய மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ், வளர்ச்சியடைந்த இந்தியா என்பதற்கான பாதை பசுமை இந்தியா வழியாகவே செல்கிறது என்று குறிப்பிட்டார். உலகளாவிய சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இந்தியாவின் தலைமைப் பண்பு தொடர்ந்து வளர்ந்து வருவதைச் சுட்டிக்காட்டிய அவர், பேச முடியாத காடுகளுக்கும், வனவிலங்குகளுக்கும் வனத்துறை அதிகாரிகளே குரலாகத் திகழ வேண்டும் என்றார்.

மேலும், வரும் ஜுன் முதல் வாரத்தில் இந்தியா தனது முதலாவது சர்வதேசப் புலி இனங்களின் கூட்டமைப்பு மாநாட்டை நடத்தவுள்ளதாகவும், இதில் சுமார் 95 நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகள் பங்கேற்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில், சிவிங்கிப்புலி பாதுகாப்பு, செயற்கை அடைக்காத்தல் முறை மூலம் கானமயில் பாதுகாப்பு, நதி நீர் அமைப்புகளைப் பராமரிப்பதில் புலி காப்பகங்களின் பங்கு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்போடு இணைந்த நாட்டின் வளர்ச்சி குறித்துப் பேசப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட காலநிலை இலக்குகளை இந்தியா காலத்திற்கு முன்பே எட்டியுள்ளதாகவும் அவர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# "உலக தேனீ தின விழா 2026"

கோயம்புத்தூர், மே 22



கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் பாதுகாப்பு மையத்தின் கீழ் இயங்கி வரும், வேளாண் பூச்சியியல் துறையின் சார்பாக புகழ்பெற்ற தேனீ வளர்ப்பாளர் ஆன்டன் ஜான்சா நினைவாக "உலக தேனீ தின விழா" மே மாதம் 20ம் நாள், பூச்சியியல் துறையில் நடைபெற்றது. உலக தேனீ தினம் 2026ம் ஆண்டின் கருப்பொருள் "நம் அனை வரையும் தாங்கி நிற்கும் தேனீ கூட்டம் போல-மக்களுக்காகவும் புவிக்காகவும் தேனீக்களாய் ஒன்றிணைவோம்" என்பதாகும். இந்நிகழ்ச்சியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் செயல் துணை வேந்தர், முனைவர் கா.சுப்பிர மணியன், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இவ்விழாவில் நான்காமாண்டு வேளாண் இளமறிவியல் மாணவர்கள் மேற்கொண்டு வரும் வணீகரீதியில் தேனீ வளர்ப்பு என்ற பாடத்தின் கீழ் மதிப்புக்கூட்டப்பட்ட தேனீப் பொருட்களான மணமூட்டப்பட்ட தேன், உதட்டு களிம்பு, தேன் சோப்பு, பாத வெடிப்பு களிம்பு, குமிழ் மெழுகுவர்த்தி, கிண்ண மெழுகுவர்த்தி, மலர் வடிவ மெழுகுவர்த்தி போன்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது. இதனை பல்கலைக்கழக செயல் துணை வேந்தர் திறந்து வைத்து விற்பனைக்கு வைக்கப்பட்டது. பொதுமக்களுக்கு தேனீக்களின் மேல் உள்ள அச்சம் விலக வேளாண் இறுதி ஆண்டு மாணவி, சி.பாக்கிய லட்சுமி முகம் முழுவதும் தேனீக்களை பரவச் செய்து 'தேனீத் தாடி' அமைத்து பார்வையாளர்களை வியக்கச் செய்தார்.

இதனைத் தொடர்ந்து உலக தேனீ தின விழாவானது துவக்கப்பட்டது. விழாவில் முனைவர் மா. முருகன், பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை, வரவேற்புரை வழங்கினார். அடுத்ததாக, முனைவர் வெ.பாலசுப்பிரமணி, தேர்வுக் கட்டுப்பாட்டாளர், முனைவர் சி.பாபு, முதன்மையர், முதுகலை

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

பட்டப்படிப்பு மற்றும் முனைவர் என்.வெங்கடேச பழனிசாமி, முதன்மையர், இளங்கலை பட்டப்படிப்பு ஆகியோர் தேனீக்களின் சிறப்பு குறித்து வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் சிறப்புரை ஆற்றிய பயிர்ப் பாதுகாப்பு மைய இயக்குநர், முனைவர். மூ. சாந்தி, தேனீக்களின் செயல்பாடுகள்குறித்து விளக்கினார். தமிழ் நாட்டின் முன்னோடி தேனீ வளர்ப்பாளர்களான ஆனந்த் மற்றும் சந்தோஷ், தேனீ வளர்ப்பின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

பின்னர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் செயல் துணை வேந்தர், முனைவர் கா.சுப்பிரமணியன் உலக தேனீ தின விழாவின் வரலாறு, தேனீக்களுக்கும் மலர்களுக்கும் இடையிலான தொடர்பு மற்றும் தேனீக்களின் முக்கியதுவம் குறித்து தலைமையுரை ஆற்றினார். இறுதியாக, முனைவர் வா.இரா.சாமிநாதன், பேராசிரியர், வேளாண் பூச்சியியல் துறை நன்றியுரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தேனீக்களின் வகைகள், தேனீ குடும்பத்தில் உள்ள இராணி தேனீ, ஆண் தேனீ, வேலைக்கார தேனீ மற்றும் தேனீக்களை கையாளும் முறை குறித்தும் செயல் விளக்கம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பள்ளிக் குழந்தைகள், விவசாயிகள், வேளாண் இளமறிவியல் மாணவர்கள் மற்றும் பல தரப்பட்ட தேனீ வளர்ப்பாளர்கள் என சுமார் 150 பேர் கலந்து கொண்டனர்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் பழங்களை மூலப் பொருளாக கொண்ட உணவுகள் : ஓர் அலசல் ஆய்வு

**அடுப்பில்லா பழ உணவுகளின் பட்டியல் மற்றும் செய்முறை விளக்கங்கள்**

அடுப்பில்லா சமையலில் பழங்களைப் பயன்படுத்தி பலவிதமான சுவையான மற்றும் ஆரோக்கியமான உணவுகளைத் தயாரிக்கலாம்.

சில பிரபலமான உணவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

### 2. பழ யோகர்ட் (Fruit Yogurt Parfait)

**தேவையான பொருட்கள்**

- தயிர் அல்லது யோகர்ட் – 1 கப்
- கலப்பு பழங்கள் (ஸ்ட்ராபெர்ரி, ப்ளூபெர்ரி, மாம்பழம்) – 1/2 கப் (நறுக்கியது)
- கிரானோலா அல்லது ஓட்ஸ் – 1/4 கப்
- தேன் அல்லது மேப்பிள் சிரப் – 1 தேக்கரண்டி (விருப்பத் திற்கேற்ப)

**செய்முறை விளக்கம்**

1. ஒரு கண்ணாடி கோப்பையில், முதலில் சிறிது கிரானோலா அல்லது ஓட்ஸ் சேர்க்கவும்.
2. அதன் மேல் ஒரு அடுக்கு தயிர் அல்லது யோகர்ட் சேர்க்கவும்.
3. பின்னர் நறுக்கிய பழங்களை ஒரு அடுக்காக அடுக்கவும்.
4. இந்த அடுக்குகளை மீண்டும் மீண்டும் செய்யவும்.
5. மேலே தேன் அல்லது மேப்பிள் சிரப் தூவி உடனடியாகப் பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

# ஒருங்கிணைந்த உரம் மேலாண்மை மற்றும் சமச்சீர் வகையில் உரம் நிர்வாகம் பயிற்சி



பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு டாக்டர் அக்ரி ராதாகிருஷ்ணன் தலைமை உரையாற்றினார்

அரியலூர், மே 22

அரியலூர் மாவட்டத்தில், அரியலூர் வட்டாரம் பெரிய நாகலூர் கிராமத்தில் ஆத்மா திட்டத்தின் மூலம் ஒருங்கிணைந்த உரம் மேலாண்மை மற்றும் சமச்சீர் உர நிர்வாகம் பயிற்சி நடைபெற்றது. இந்த பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு டாக்டர் அக்ரி ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார், சிறப்பு விருந்தினராக வேளாண்மை அறிவியல் ஆய்வு நிலைய விஞ்ஞானி திருமலைவாசன் கலந்து கொண்டார். துணை வேளாண்மை அலுவலர் ஆல்வின், உதவி வேளாண்மை அலுவலர் லெனின், மற்றும் ஸ்ரீதேவி கலந்து கொண்டனர். ஆத்மா திட்டத்தின் மூலம் வட்டார தொழில்நுட்ப அலுவலர் சக்திவேல் மற்றும் அன்பழகன் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், ஒருங்கிணைந்த உர மேலாண்மை மற்றும் சமச்சீர் உரம் நிர்வாகம் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். அனைத்து இயற்கை எரு உரங்கள், அனைத்து வகையான நுண்ணுயிர் உரங்கள், அனைத்து பயிர்களுக்கான நுண்ணூட்ட உரங்கள், இவற்றின் முக்கியத்துவம் மற்றும் பயன் படுத்தும் விதத்தை தெளிவாக எடுத்துரைத்தார். பசுந்தால் பயிர் சாகுபடி முறை, பசுந்தலைப் பயிர் சாகுபடி முறை, அசோலா, நீல பச்சை பாசியை பயன்படுத்தும் முறை தெளிவாக எடுத்துரைத்தார். மற்றும் மண் ஆய்வுப்படி பயிருக்கு தேவையான உரங்களை அளவான முறையில் சமச்சீர் வகையில் பயன்படுத்தும் முறை களை எடுத்துரைத்தார்.

வேளாண்மை விஞ்ஞானி நெல் பயிர் கடலை பயிர், மக்காச் சோளப் பயிர், சாகுபடி முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துரைத் தார். இந்த பயிற்சியில் கலந்து கொண்ட துணை வேளாண்மை அலுவலர் அனைவரையும் வரவேற்று பேசினார். வேளாண்மை உதவி அலுவலர்கள் பயிற்சியை ஒருங்கிணைந் தனர். ஆத்மா திட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் சக்திவேல் மற்றும் அன்பழகன் சிறப்பாக ஏற்பாடு செய்து, நன்றி உரையாற்றினார்கள்.

# உர சமச்சீர் பயன்பாடு விழிப்புணர்வு முகாம்



பெரம்பலூர், மே 22

பெரம்பலூர் வேளாண் அறிவியல் மையத்தில் உரங்களின் சமச்சீர் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை சேர்ந்த உதவி பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பாலமுருகன், தலைமை தாங்கினார். அவர் அங்கக வேளாண்மையில் கோழி, பன்றி, ஆடு மற்றும் கன்று எரு ஆகிய அங்கக உரங்கள் மண்ணிற்கு மிக முக்கியம் என்பதை வலியுறுத்தினார். மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் (பொ.) முனைவர் மு.புனிதாவதி நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உரப் பரிந்துரையும், யூரியா மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்தவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றியும் விளக்கி கூறினார். தொழில் நுட்ப வல்லுநர் – பயிர் பாதுகாப்பு பி.தோம்னிக் மனோஜ், உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் மேம்பாடு மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண் வள அட்டையில் பரிந்துரைத்த உர அளவுகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத் தினார். இப்பயிற்சியில் தொழில்நுட்ப வல்லுநர் – மனையியல் கோகிலவாணி, சுய உதவிக் குழு பெண்கள் ஊட்டச்சத்து தோட்டம் அமைத்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இவ்விழாவில் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை சேர்ந்த இளநிலை உதவியாளர் ராம்குமார், கலந்து கொண்டார். அதே போல் சுற்றுலா பயணமாக வேளாண் அறிவியல் மையத்தில் உள்ள செயல் விளக்கத்திடல்களில் நடக்கும் செயல்பாடுகளை 30 மேற்பட்ட சுய உதவிக் குழு தலைவிகள் கேட்டறிந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW
isha
POWERGRID
BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# சேலம் மாவட்டத்தில் விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல்




சேலம், மே 22

வேளாண்மை உழவர் நலத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு விதமான பயிற்சிகள் செயல் விளக்கங்கள் கலந்துரை யாடல் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் விவசாயி களுக்கும் வேளாண் விஞ்ஞானிகளுக்கும் உள்ள இடை வெளியை குறைக்கவும், விவசாயிகளுடன் நேரடி கலந்துரை யாடல் ஏற்படுத்தப்படும் நோக்கத்திலும் வேளாண்மை அறிவியல் நிலையம் சந்தியூரில் விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி இரண்டு நாட்கள் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன், தலைமை தாங்கி அனைத்து விவசாயிகளும் உழவர்கள் விவசாய அடையாள எண் பெற வேண்டும் என சிறப்புரை ஆற்றினார். உழவர் பயிற்சி நிலையம் துணை இயக்குநர் அருணா, நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து பயிர் சார்ந்த பருவம் சார்ந்த தொழில்நுட்பங்களை விளக்க உரையாற்றினார்.

வேளாண்மை அறிவியல் நிலையம் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் விஜயன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் ஆராய்ச்சிகள் பற்றி விவசாயி களுடன் கலந்துரையாடினார். வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சியியல் துறை பேராசிரியர் ரவி, பூச்சி மேலாண்மை பற்றி விவசாயிகளுடன் கலந்துரையாடினார். உழவியல் துறையின் பேராசிரியர் இளங்கவி, ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைத்து இயற்கை உரங்களை அதிக அளவில் பயன்படுத்த வேண்டும் என்றும் கோடை காலத்தில் மேற்கொள்ள வேண்டிய உழவியல் தொழில்நுட்பங்களை தெரிவித்து விவசாயிகளுடன் கலந்து உரையாடினார்.

கால்நடை மருத்துவர் கோகிலா, கால்நடை பராமரிப்பு மற்றும் தடுப்பூசி நோய்கள் குறித்து கலந்துரையாடினார். வனவியல் துறை தொழில் நுட்ப வல்லுனர் கிருபா, மரம் வளர்ப்பு பற்றியும்

வனம் பாதுகாப்பு பற்றியும் கலந்துரையாடினார். விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று உதவி இயக்குநர் நவநீதகிருஷ்ணன், விதைபண்ணை விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

இந்த விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் சேலம், வீரபாண்டி, பனமரத்துப்பட்டி, அயோத்தியா பட்டணம் மற்றும் சங்ககிரி வட்டாரத்தைச் சார்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# விதை உரிமம் பெற்ற பின்னரே விதை விற்பனை செய்ய வேண்டும்

விருதுநகர், மே 22

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள விதை விற்பனை நிலையங்கள் அனைத்தும் விதை உரிமம் பெற்ற பின்னரே விதை விற்பனை செய்ய வேண்டும்.

ஏற்கனவே விதை உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதியாகும் முன்னர் விதை உரிமம் புதுப்பித்தலுக்கு விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தை அணுக வேண்டும்.

தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்ட விதைகளை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று துறையினால் வழங்கப்படும் சான்று பெற்ற விதைகளையும் மற்றும் பதிவுறுச்சான்று பெற்ற விதைகளையும் மட்டுமே விற்க வேண்டும். விவசாயிகளுக்கு விலைபட்டியலில் விதையின் பெயர், இரகம், குவியல்எண், காலவதியாகும் நாள், விற்பனை விலை, ஆகியவற்றுடன் கையொப்பமிட்டு விற்பனை ரசீது வழங்க வேண்டும்.

உண்மை நிலை விதைகளை உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்யும் போது விதை முளைப்பு சான்று கட்டாயம் பெற வேண்டும் என்று விதை ஆய்வு துணை இயக்குநர், விருதுநகர் செ.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# பருத்தி பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி



சிவகங்கை, மே 22

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டாரம் வேளாண்மைத் துறையின் மூலமாக மாநில விரிவாக்க சீரமைப்பு திட்டம் அட்மா திட்டத்தின் கீழ் உள்மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி சம்பந்தமாக பருத்தி பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி 22.05.2026 அன்று சாத்தனி கிராமத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் சிவகங்கை வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரமகாலிங்கம் தலைமையேற்று பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மண் பரிசோதனை முடிவுகளுக்கு ஏற்ப தழை மணி மற்றும் சாம்பல் சத்துக்களை இட வேண்டும். சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுபடுத்த ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கை பயன்படுத்தலாம் என்று மண் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

வேளாண்மை உதவி இயக்குநர் தங்கபாண்டியன் சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் நோய்களை தாங்கி வளரக்கூடிய ரகங்கள் தேர்வு செய்தல் மற்றும் விதை நேர்த்தி செய்தல் விதைத்த 8 முதல் 9 வாரங்கள் வரை பயிரை களைகள் இன்றி பராமரிக்க வேண்டும் என்று பயிர் பாதுகாப்புமற்றும் களை மேலாண்மை குறித்து தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு விரிவான முறையில் எடுத்துக் கூறப்பட்டது.

இப்பயிற்சியில் ராஜேஷ் நல்லையா, நுண்ணூட்டச் சத்து குறைபாடான பருத்தி சாகுபடி செய்யும் பகுதிகளில் இரும்பு, துத்தநாகம், போரான் மற்றும் மக்னீசியம் போன்ற நுண் சத்துக் களின் குறைபாடு அறியப்படுவதால் விளைச்சல் குறைகிறது.

ஆகையால் நுண்ணூட்டகலவையை ஹெக்டேருக்கு 12 கிலோ வீதம் போதுமான அளவு மணலுடன் கலந்து உழவின் போது அல்லது விதைத்த 3 நாட்களுக்குள்ளோ இடுதல் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். மேலும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கி.கோகிலா, அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் பருத்தி பிளஸ் நுண்ணூட்டத்தின் பயன்பாடுகள் பற்றியும் எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சதீஸ், பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் மூலம் விதை நேர்த்தி குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.



# நீர் நிலைகளில் உள்ள வண்டல் மண்ணை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க ஏற்பாடு




முன்பெல்லாம் கிராமப்புறங்களில் கோடை காலம் பிறந்து விட்டாலே அவரவர் கிராம குளங்கள், கண்மாய்களில் உள்ள வண்டல் மண் குளகரம்பைகளை விவசாயிகள் எடுத்து வந்து தங்களுடைய நிலத்தில் கொட்டுவார்கள். வளமான வண்டல் மண் தங்களுடைய நிலத்தின் மண்வளத்தை மாற்றி அதிக விளைச்சல் கொடுக்கும், அத்துடன் குளங்களில் தேங்கியுள்ள மேல் மண் அப்புறப்படுத்துவதால் குளங்களின் நீர் கொள்ளளவு உயரும். இதை அவர்கள் குடி பாரமரித்து பணியாக மேற்கொண்டனர்.

தற்போது மண் அரிய வகை இடுபொருள். நாளுக்கு நாள் மண்ணின் தேவை அதிகரிக்கப்பதால் தற்போது மண் அள்ளு வதற்கு அரசு சில விதிமுறைகளையும் நிபந்தனைகளை வழங்கி இலவசமாக அள்ளுவதற்கு வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

**தமிழகத்தில் எத்தனை நீர்நிலைகள் உள்ளன?**

தமிழகத்திலுள்ள 40,000 ஏரிகள் குளம் கண்மாய்கள் நீர்வளத்துறை மற்றும் ஊரக உள்ளாட்சி துறை கட்டுபாட்டில் உள்ளது.

**யார் யாருக்கு இலவசமாக மண் அள்ள அனுமதி?**

விவசாயிகள், மண்பாண்ட தொழிலாளர்கள் மற்றும் தனி நபர்களின் வீட்டு தேவைக்கேற்ப இலவசமாக எவ்வித உரிமக் கட்டணமின்றி முறையான அனுமதியுடன் அள்ளுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

## அனுமதி பெற என்ன செய்ய வேண்டும்?



இதற்கென உருவாக்கப்பட்ட இணைய தளம் ( tn,esevai tn.gov.in) வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப் பித்த 10 நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட வட்டாட்சியர்களால் மண் அள்ளுவதற்கு அனுமதி வழங்கப்படும். அனுமதி பெறாமல் மண் அள்ளுவது சட்டபடி குற்ற மாகும். இத்திட்டத்தை மாவட்ட ஆட்சி யரால் சிறந்த முறையில் நிறை வேற்றிட 26-27 ஆம் ஆண்டுக்கான கண்மாய்கள் குளங்கள் ஏரிகள் குறித்த பட்டியலை அந்த அந்த மாவட்ட ஆட்சியர் அரசிதழ் ( Govt gazette) வெளியிட வேண்டுமாய் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தற்போதைய நடைமுறைகள் விதிமுறைபடி எவ்வளவு மண் அள்ள வேண்டும் என்பதை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் குழு கண்காணிக்க வேண்டும்.

சமசீராக உரமிட வண்டல் மண் அவசியமானதாகும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.




# விவசாயிகளுக்கு தக்கைப்பூண்டு விதைகள் விநியோகம்

## வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

அரியலூர், மே 22

அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் உலகம்மை முருகக்கனி, திருமானூர் வேளாண்மை விரிவாக்க மையத்தினை ஆய்வு செய்தார். குறுவை மற்றும் சம்பா நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தக்கைப்பூண்டு விதைகள் மானியத்தில் வழங்கப்பட உள்ளது என தெரிவித்தார். 50% மானியத்தில் தக்கைப்பூண்டு விதைகள் வழங்கும் பணியைத் தொடங்கி வைத்து விவசாயிகளுக்கு அதனை வழங்கினார்.

நெல் சாகுபடி செய்ய உள்ள வயல்களில் தக்கைப்பூண்டு விதைகளை விதைத்து பூக்கும் தருணத்தில் சேற்று உழவுக்கு முன்பு மடக்கி உழுவதன் மூலம் மண்ணின் வளம் அதிகரிப் பதுடன் ரசாயன உரத்தின் தேவையும் குறைகிறது என்று கூறினார்.

மேலும், பசுந்தாள் உரமாக தக்கைப்பூண்டு விதைகள் மானியத்தில் பெறுவதற்கும் பிற மானியத் திட்டங்களில் பயனடைவதற்கும் விவசாயிகள் தங்கள் நில உடைமைகளை பதிவு செய்த பின் வழங்கப்படும் நிரந்தர அடையாள எண்ணைத் தெரிவிக்க வேண்டும் எனவும் வேளாண்மை இணை இயக்குநர் கூறினார்.

எனவே தங்கள் நில உடைமையை இது வரை பதிவு செய்யாத விவசாயிகள் உடனே தங்கள் பகுதி விரிவாக்க அலுவலரை அணுகி தங்கள் நில உடைமைகளை பதிவு செய்து நிரந்தர அடையாள எண்ணை பெற்றுக் கொள்ளுமாறு வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது திருமானூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பரமசிவம், துணை வேளாண்மை அலுவலர் கொளஞ்சி மற்றும் கிடங்கு கண்காணிப்பாளர் மணிவண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வேளாண்மை அறிவியல் நிலையம் அருப்புக்கோட்டை மூலம் சமச்சீர் உர பயன்பாடு குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம்

விருதுநகர், மே 22

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் வேளாண் விவசாய பெரு மக்களுக்கு சமச்சீர் உர பயன்பாட்டின் அவசியம் குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம் அருப்புக்கோட்டை (கோவிலாங்குளம், செட்டிகுறிச்சி, சிதம்பராபுரம், கஞ்சநாயக்கன்பட்டி, காரியாபட்டி (அரசகுளம், ஆவியூர், குறண்டி), திருச்சுழி (கத்தாளம்பட்டி, இறைசின்னம்பட்டி) வட்டாரங்களில் கடந்த ஒரு மாத காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்பிரச்சாரத்தின் மூலம் மண் பரிசோதனை அடிப்படையில் ஆன உர பரிந்துரை, பயிர் தேவைக்கேற்ற உர அளவு, இயற்கை மற்றும் உயிர் உரங்களின் ஒருங்கிணைந்த பயன்பாடு மற்றும் செலவை குறைத்து மகசூலை அதிகரிக்கும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் அதிகப் படியான இரசாயன உர பயன்பாட்டால் மண்வளம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதையும் முனைவர் ராமசுப்பிர மணியன், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவரால் எடுத்துரைக்கப்பட்து.

அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் தொழில்நுட்ப வல்லுநர்களான முனைவர் கிருஷ்ணகுமார், முனைவர் ஜடா கவிதா, முனைவர் நல்ல குரும்பன், முனைவர் ஆனந்தி, மற்றும் முனைவர் சம்பத்குமார் ஆகியோர்களால் கீழ்கண்ட தொழில்நுட்ப உரைகள் எடுத்துரைக்கப்பட்டது.

சமச்சீர் உர பயன்பாடு என்பது பயிர்களின் தேவைக்கு ஏற்ப சரியான அளவு மற்றும் சரியான காலத்தில் உரங்களை பயன் படுத்தும் முறையாகும் இயற்கை மற்றும் உயிர் உரங்களின் ஒருங்கிணைந்த பயன்பாடு மூலம் மண்வளம் மேம்பட்டு பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் சமநிலையாக கிடைக்கின்றன தொழு உரம் கம்போஸ்ட் பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்கள் போன்ற இயற்கை உரங்களுடன்

அசோஸ்பைரில்லம் பாஸ்போ பாக்டீரியா போன்ற உயிர் உரங்களை இணைத்து பயன்படுத்துவதன் மூலம் மண் நுண்ணுயிர் செயல்பாடு அதிகரித்து வேர் வளர்ச்சி மற்றும் ஊட்டச்சத்து உறிஞ்சுதல் மேம்படுகின்றது. இதனால் ரசாயன உரங்களின் பயன்பாடு குறைந்து, உற்பத்தி செலவு குறைவதுடன் நிலையான மகசூல் பெற உதவுகின்றது. இயற்கை மற்றும் உயிர் உரங்களின் ஒருங்கிணைந்த பயன்பாடு மண் ஆரோக்கியத்தை பாதுகாத்து பயிர்களுக்கு தொடர்ச்சியான ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதி செய்வதால் நிலையான மகசூல் பெற உதவுகின்றது.

முனைவர் கிருஷ்ணகுமார், மண்ணியல் துறை தொழில்நுட்ப வல்லுநர், மண்வள அட்டையின் முக்கியத்துவத்தை வேளாண் விவசாய பெருமக்களுக்கு தெரிவித்தார். மண்வள அட்டை என்பது நிலத்தின் ஊட்டச்சத்து நிலையை அறிய உதவும் முக்கிய ஆவணம் ஆகும். இதில் மண்ணில் உள்ள நைட்ரஜன் பாஸ்பரஸ் பொட்டாசியம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்களின் அளவுகள் குறிப்பிடப்படுகின்றன.

இதன் அடிப்படையில் விவசாயிகள் தேவையான அளவு உரங்களை சரியான முறையில் பயன்படுத்த முடிவதால் உர செலவு குறைந்து மண்வளம் பாதுகாக்கப்படுகின்றது. மேலும் சமச்சீர் உரம் பயன்பாட்டை ஊக்குவித்து அதிக மற்றும் நிலையான மகசூல் பெற மண்வள அட்டை முக்கிய பங்காற்றுகிறது என்பதை செயல் விளக்கங்கள் மூலம் எடுத்துக்காட்டினார்.

இனி வரும் காலங்களிலும் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பிற வட்டாரங்களில் அமைந்துள்ள கிராமங்களில் இப்பிரச்சார விழிப்புணர்வு தொடரும் எனவும் வேளாண் அறிவியல் நிலையத்தில் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ராமசுப்பிரமணியன் தெரிவித்தார்.



# தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் 'உலகத் தேனீ தினம் மற்றும் தேசிய அரக்கு பூச்சி தின கொண்டாட்டம்



திருச்சி, மே 22

தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகத்தின் வேளாண்மைத் துறை சார்பில் உலகத் தேனீ தினம் மற்றும் தேசிய அரக்கு பூச்சி தினம் அரக்கு தினம் மே 20 கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வு வேளாண்மைத் துறை வேளாண் மைப் புல முதல்வர் முனைவர் K.சோழன் தலைமையிலும், உதவிப் பேராசிரியர்கள் N.நிவேதா மற்றும் முனைவர் S.மங்கையர்க்கரசி ஆகியோரின் மேற்பார்வையிலும் நடைபெற்றது.

வேளாண் மாணவர்கள் தேனீக்களின் வகைகள், ராணித் தேனீ, வேலைக்காரத் தேனீ, ஆண் தேனீ ஆகியவற்றின் சமூக அமைப்பு மற்றும் பணிகள் குறித்து நேரடி மாதிரிகளுடன் விளக்கினர். தேனீப் பெட்டி, புகைப்பான், தேனீ உடை, தேன் பிரிப்பான் போன்ற தேனீ வளர்ப்பிற்குத் தேவையான உபகரணங்களின் பயன்பாடு செயல் முறையாகக் காட்டப்பட்டது. மேலும் அரக்குப் பூச்சி வளர்ப்பு முறைகள், குசுமி அரக்கு மற்றும் ரங்கீனி அரக்கு ஆகிய வகைகள் குறித்து விளக்கப்பட்டது. மேலும், சந்தையில் விற்பனையாகும் அரக்கின் வடிவங்களான பட்டன் லாக், ஸ்டிக் லாக், ஸெல்லாக், சீடு லாக் போன்றவை காட்சிப்படுத்தப்பட்டன. பலாசு, கருவேலம், குசும் போன்ற மரங்களில் அரக்கு உற்பத்தி செய்யும் முறை மற்றும் மெருகு, மின்காப்பு பொருட்கள், அரக்கு வளையல்கள் தயாரிப்பு போன்ற அரக்கின் தொழில்துறைப் பயன்கள் எடுத்துரைக் கப்பட்டன. தேனின் முக்கியத்துவம் தேனின் மருத்துவ குணங்கள் மற்றும் ஊட்டச்சத்து மதிப்பை வலியுறுத்தும் வகையில், மாணவர் களால் தயாரிக்கப்பட்ட 'தேன் தேநீர்' அனைவருக்கும் வழங்கப் பட்டது.

# தலைவாசல் வட்டாரத்தில் வேளாண் அடுக்குத் திட்டப்பதிவு விதை ஆய்வு துணை இயக்குநர் நேரில் ஆய்வு!

தலைவாசல், மே 22

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் வேளாண் அடுக்குத் திட்டம் (GRAINS) மூலமாக விவசாய அடையாள எண் பதிவு செய்யும் பணிகளை, சேலம் விதை ஆய்வு துணை இயக்குநர் சித்ரா, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



இது குறித்து தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது :



தமிழக அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் மானியங்களை விவசாயிகள் உடனுக்குடன் பெறும் வகையில் வேளாண் அடுக்குத் திட்டம்' (GRAINS) தீவிரமாகச் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் தங்களது நில ஆவணங்கள் மற்றும் பயிர் சாகுபடி அறிக்கைகளை ஒவ்வொரு முறையும் தனித்தனியாகச் சமர்ப்பிக்கும் காகித நடைமுறை தவிர்க்கப்படுகிறது. டிஜிட்டல் முறையில், தகுதியான விவசாயிகளுக்குக் குறித்த நேரத்தில் பலன்கள் சென்றடைவதை இத்திட்டம் உறுதி செய்கிறது. விவசாயிகள் இத்திட்டத்தில் ஆன் லைன் மூலம் தங்களைப் பதிவு செய்து கொள்ள 28.05.26 வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தலைவாசல் வட்டாரத்தில் பல்வேறு பயிர்களைச் சாகுபடி செய்து வரும் அனைத்து விவசாயிகளும் தங்களது ஆதார் எண், கைபேசி எண் மற்றும் நில உடைமை விவரங்களுடன் (பட்டா/சிட்டா) தங்களுக்கு அருகில் உள்ள அரசு இ-சேவை மையங்கள் (e-Sevai Maiyam) மூலமாகவோ அல்லது தங்கள் பகுதி வேளாண்மை அலுவலர்களை அணுகியோ ஆன் லைனில் விவரங்களை இணைத்துப் பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு பதிவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் ஆதார் எண் போன்ற தனித்துவமான, தேசிய அளவிலான விவசாய அடையாள எண் வழங்கப்படும். இது குறித்த கூடுதல் விவரங்களுக்குத் தலைவாசல் வட்டார வேளாண்மை மற்றும் தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை விவசாயிகள் நேரில் அணுகிப் பயன் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நில உடைமை பதிவு முகாமை ஆய்வு செய்த மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்



அரியலூர், மே 22

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் அனைவரும் தங்களின் நிலத்தின் விபரத்தினை உடனடியாக நில உடைமை பதிவேட்டில் பதிவு செய்து தனித்துவ அடையாள அட்டை பெற வேண்டும். வட்டார வேளாண்மைஉதவி இயக்குநர் சாந்தி குழுமூர் கிராமத்தில் நடைபெற்ற முகாமினை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் செந்துறை வட்டாரத்தில் 2300 நில உரிமையாளர்கள் இன்னும் பதிவு செய்யவில்லை. எனவே உடனடியாக தங்கள் பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி ஆதார் எண்,ஆதாருடன் இணைக்கப்பட்ட கைப்பேசி மற்றும் கணினி சிட்டா எடுத்துக் கொண்டு வந்து பதிவு செய்து கொள்ளலாம். அதுமட்டுமின்றி சகோதரத் துறைகளான வேளாண் பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை,வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, விதைச்சான்று துறை மற்றும் விதை ஆய்வுத்துறை அலுவலகங்களிலும் பதிவு செய்து கொள்ளலாம். மேலும் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி விதை அலுவலர் / அட்மா அலுவலர்கள் / பொது சேவைமையம் போன்றவர்களை அனுகியும் பதிவு செய்து கொள்ளலாம். வேளாண் விரிவாக்க மையம், துணை வேளாண்மை விரிவாக்க மையம், பொது சேவை மையங்கள் போன்ற இடங்களில் நில உடைமை பதிவு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்து விவசாயிகளும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி பதிவு செய்து விவசாய அடையாள எண் பெற்றுக் கொள்ளுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஆ.சாந்தி, செந்துறை வட்டார விவசாயிகளை கேட்டுக்கொள்கிறார்.

# முளைப்புதிறன் அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற அழைப்பு

திருவண்ணாமலை, மே 22

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை விதைப்பிற்கு முன் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதை பரிசோதனை செய்தபின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்புதிறன் குறைபாடு இல்லாமல் இருப் பதையும் விதைகளில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம்.

மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத் தன்மை ஆகியவற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிற இரக கலவன், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியனவற்றை பரிசோதனை செய்து அதன்பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.. விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூபாய் 80/- வீதம் விதைப் பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# விவசாயிகள் வேளாண் திட்டங்களில் பயன் பெற விவசாய அடையாள அட்டை மிக அவசியம்

இராமநாதபுரம், மே 22

இராமநாதபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் உ.அம்பேத்குமார் கூறியதாவது :



மத்திய, மாநில அரசுகளின் வேளாண் நலத்திட்டங்களை உடனுக்குடன் பெற விவசாயிகள் அனைவரும் விவசாய அடையாள எண் பெற்றுக்கொள்ள வேண்டும். இனிவரும் காலங்களில் விவசாய அடையாள எண் இருந்தால் மட்டுமே வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மற்றும் வேளாண் சார்ந்த பிற துறைகளின் மூலம் வழங்கப்படும் விவசாய கடன், பயிர் காப்பீடு, பி.எம்.கிசான், விதைகள், உரங்கள், நிவாரணத்தொகை போன்ற சலுகைகளை பெற முடியும்.

தற்போது இராமநாதபுரம் வட்டாரத்திற்கு உட்பட்ட அனைத்து கிராமங்களிலும் இதற்காக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆதார் எண், நில ஆவணம் மற்றும் தொலைபேசியுடன் சிறப்பு முகாம்களில் அடையாள பதிவு செய்யும்படி அறிவுறுத்தப்படுகிறது (அல்லது) அருகிலுள்ள இ-சேவை மையங்களில் பதிவு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது.



# பவானி வட்டாரத்தில் உர மேலாண்மை மூலம் இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைத்தல் பயிற்சி



ஈரோடு, மே 22

ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரம், வேளாண்மை – உழவர் நலத்துறை கீழ், செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் சன்னியாசிபட்டி வருவாய் கிராமத்தில் உழவர்களுக்கு உர மேலாண்மை மூலம் இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைத்தல் பயிற்சி பவானி வட்டார வேளாண்மை அலுவலர் ஆ.வசந்தி தலைமையில் நடைபெற்றது.

வேளாண் அலுவலர் பேசுகையில் வேளாண் இடுபொருட்களின் மானிய விபரங்கள் பற்றியும், தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் தெளிவாக விளக்கினார். வேளாண் அறிவியல் நிலையத்தை சார்ந்த சீனிவாசன், பேசுகையில் மண் பரிசோதனை மூலம் உர மேலாண்மை மேற்கொள்வதன் அவசியம் குறித்தும் ஒவ்வொரு பயிர் சாகுபடி செய்வதற்கு முன்பும் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து கொண்டு அதன் அடிப்படையில் உரமிடவேண்டும் என்பதை வலியுறுத்தி கூறினார். இதன் மூலம் இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைக்க முடியும் என்பதை பற்றியும் மேலும் குமரகுரு வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் முனைவர் பிரியங்கா, கால்நடை கழிவுகளைக் கொண்டு அங்கக முறையில் உர மேலாண்மையை கடைப்பிடிக்கும் வழிமுறை களையும் அதன் மூலம் இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைக்க முடியும் என்பதை விளக்கமாகவும் வாழை, கரும்பு பயிர்களின் கழிவுகளை கொண்டு தொழுவுரம் தயாரிக்கும் முறைகள், மண்புழு உரம் தயாரிக்கும் முறைகள், கால்நடை கழிவுகளை உரமாக்கும் முறைகள், பசுந்தாள் உர முறைகள், அசோலா

வளர்ப்பு, பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பு அதன் கழிவுகளை உரமாக்கும் முறைகள், அங்கக இடுபொருட்கள் தயாரிக்கும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் க.சித்தையன் பேசுகையில் PM Kisan பற்றியும் உழவர் அடையாள எண் பதிவு செய்தல் மற்றும் துறை சார்ந்த திட்டங்களை கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளார்கள் சிறப்பாக செய்திருந்தனர். பயிற்சியில் சன்னியாசிபட்டி கிராமத்தை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



# பன்றிகளில் ஏற்படும் ஒட்டுண்ணி நோய்களும் அவற்றைத் தடுக்கும் முறைகளும்

பன்றிகளில் ஏற்படும் ஒட்டுண்ணிகள் பெரும்பாலும் இரைப்பை மற்றும் குடல் சார்ந்தவை. இதில் உருளைப் புழுக்கள், நாடாப் புழுக்கள் மற்றும் தட்டைப் புழுக்கள் முக்கியமானவை.

**உருளைப் புழுக்கள் (Round worms)**

அஸ்காரிஸ் சூயம் (Ascaris suum) என்பது பன்றிகளில் ஏற்படும் குடல் புழுக்கள். கல்லீரல் பாதிப்பு, சுவாச கோளாறுகள், வயிற்றுப் போக்கு மற்றும் பன்றிகளின் எடையை வெகுவாகக் குறைக்கிறது. இந்த புழுக்கள் 16 அங்குலம் வரை வளரக்கூடியவை.

● **பாதிப்பு :** லார்வாக்கள் கல்லீரலை (Milk spots) சேதப்படுத்து கின்றன, வயது வந்த புழுக்கள் குடலில் வாழ்கின்றன.

● **அறிகுறிகள் :** வளர்ச்சி குறைதல், இருமல், மூச்சுத்திணறல், வயிற்று வீக்கம் மற்றும் குடல் அடைப்பு.

● **பரவும் முறை :** அசுத்தமான தீவனம், நீர் மற்றும் மண்ணின் மூலம் புழு முட்டைகளை உட்கொள்வன் மூலம் பரவுகிறது.

● **சிகிச்சை :** அல்பெண்டசோல் (Albendazol) அல்லது ஃபென்பெண்டசோல் (Fenbedazole-Panacur) போன்ற ஒட்டுண்ணி எதிர்ப்பு மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

● **தடுப்பு முறை :** பன்றி கொட்டகைகளை சுத்தமாக வைத் திருத்தல், சாணப்பரிசோதனை செய்து புழு நீக்கம் செய்தல் மற்றும் சுகாதாரமான தீவனம் அளித்தல் மூலம் இப்புழுக்களை கட்டுப் படுத்தலாம்.

டிரிசினெல்லா ஸ்பைராலிஸ் (Trichinella spiralis) என்பது ‘பன்றி புழு‘ (Pork worm) என அழைக்கப்படுகிறது. இது வேகவைக்கப்படாத அல்லது சரியாகச் சமைக்கப்படாத பன்றி இறைச்சியை உண்பதன் மூலம் மனிதர்களுக்குப் பரவுகிறது. இந்த புழுக்கள் பன்றியின் தசை நார்களில் தங்கி, மனிதர்களுக்குத் தசை வலி மற்றும் உடல்நலப் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. பன்றிகள் பாதிக்கப்பட்ட இறைச்சி அல்லது எலிகளை உண்பதால் இந்த ஒட்டுண்ணி பரவுகிறது. இறைச்சியை 71$^{0}$C வெப்பநிலையில் நன்கு சமைப்பதன் மூலம் அல்லது 6 அங்குலத்திற்கும் குறைவான தடிமன் கொண்ட பன்றி இறைச்சியை 20 நாட்களுக்கு –15$^{0}$C வெப்பநிலையில் உறைய வைப்பதன் மூலம் இதைத் தடுக்கலாம்.

**நாடாப்புழுக்கள் (Tapeworms)**

டேனியா சோலியம் (Taenia solium) – பன்றி இறைச்சி நாடாப்புழு பன்றிகளின் தசை திசுக்களில் சிஸ்டிசெர்கஸ் செல்லுலோசே (Cysticercus cellulosae) என்ற நிலையை ஏற்படுத்துகிறது. இது பன்றி இறைச்சயின் மூலம் மனிதர்களுக்கு பரவி சிஸ்டிசெர்கோசிஸ் என்ற நோயை உருவாக்குகிறது. இவை முறையற்ற கழிவு நீர் மேலாண்மை, சுகாதாரமற்ற சூழலில் வளர்ப்பது போன்றவற்றால் அதிகம் பரவுகின்றன. இதனால் பன்றிகளுக்கு வயிற்றுப்போக்கு, எடை இழப்பு, ஊட்டச்சத்து குறைபாடு போன்றவை ஏற்படும்.

**தடுப்பு முறைகள்**

- பன்றி கொட்டகைகளை சுத்தமாக வைத்திருத்தல்
- பன்றிகளுக்கு சிஸ்வாக்ஸ் (Cysvax) தடுப்பூசி மற்றும் புழு நீக்கம் (Deworming) செய்தல்
- பன்றிகளுக்கு சுத்தமான குடிநீர் மற்றும் தீவனம் அளித்தல்

**தட்டைப் புழுக்கள் (Trematodes)**

பன்றிகளை பாதிக்கும் முக்கிய தட்டைப் புழுக்கள் – Fasciolopsis buski மற்றும் Gastrodiscoides hominis போன்றவை மனிதர் களுக்கும் பரவக்கூடியவை. பெரும்பாலும் ஈரநிலங்கள் மற்றும் மோசமான சுகாதார சூழ்நிலைகளில் வளர்க்கப்படும் பன்றிகளில் காணப்படுகின்றன.

**ஃபாசியோலோப்சிஸ் பஸ்கி (Fasciolopsis buski)**

இது பன்றி மற்றும் மனிதர்களின் சிறுகுடலில் வாழும் ஒரு பெரிய குடல் புழு ஆகும்.

**காஸ்ட்ரோடிஸ்கோயிட்ஸ் ஹோமினிஸ் (Gastrodiscoides hominis)**

இது பன்றிகளின் பெருங்குடலில் காணப்படும் தட்டைப் புழுக்கள்.

**பாரகோனிமஸ் வெஸ்டர்மானி (Paragonimus westermanni)**

இது பன்றிகளின் நுரையீரலைப் பாதிக்கும் தட்டைப் புழுக்கள்.

**பாதிப்பு மற்றும் அறிகுறிகள்**

- **வயிற்றுப்போக்கு :** கடுமையான வயிற்றுப்போக்கு (diarrhoea) ஏற்படும்
- **எடை இழப்பு :** பன்றிகள் உணவு உட்கொண்டாலும் மெலிந்து காணப்படும்

● **ரத்த சோகை :** ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் ரத்த சோகை உண்டாகும்

● **உடல் வீக்கம் :** வயிற்றுப் பகுதியில் தண்ணீர் கோர்த்தது போன்ற வீக்கம் (Ascites) ஏற்படலாம்

**பரவும் முறை**

பன்றிகள் தண்ணீரில் உள்ள தாவரங்கள் (உதாரணமாக, நீர் காய், கொடி வகை) மற்றும் பாதிக்கப்பட்ட நத்தைகள் (snails) மூலம் இந்த ஒட்டுண்ணிகளை உட்கொள்கின்றன.

**கட்டுப்பாட்டு முறைகள்**

● **சுகாதாரம் :** பன்றி கொட்டகைகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

● **தண்ணீர் மேலாண்மை :** நத்தைகள் அதிகமாக இருக்கும் நீர் நிலைகளில் பன்றிகள் மேய்வதைத் தவிர்க்க வேண்டும்.

● **மருந்து சிகிச்சை :** கால்நடை மருத்துவரின் ஆலோசனையுடன் புழு நீக்க மருந்துகளை (Anthelmintics) குறிப்பிட்ட கால இடைவெளியில் வழங்க வேண்டும்.

**புற ஒட்டுண்ணிகள் (Ectoparasites)**

பன்றிகளில் காணப்படும் புற ஒட்டுண்ணிகள் தோலில் வாழ்ந்து, இரத்தத்தை உறிஞ்சி, அரிப்பு, தோல் நோய்கள் மற்றும் எடை இழப்பை ஏற்படுத்தும். பன்றிகளில் பொதுவாகக் காணப்படும் ஒட்டுண்ணிகள் – பன்றி சிற்றுண்ணிகள் (Sarcoptes scabiei var. suis) மற்றும் பன்றிப் பேன்கள் (Haematopinus suis) ஆகும். இவை கடுமையான தோல் எரிச்சல் மற்றும் நோய்களைப் பரப்புகின்றன

**பன்றிகளில் காணப்படும் முக்கிய புற ஒட்டுண்ணிகள்**

● **பன்றி சிற்றுண்ணிகள் (Sarcoptes suis - Mange) :** இவை தோலுக்கு அடியில் துளைகளை உருவாக்கி, கடுமையான அரிப்பு (Sarcoptic mange), தோல் தடித்தல் மற்றும் முடி கொட்டுதல் போன்றவற்றை ஏற்படுத்துகின்றன.

● **பன்றிப் பேன்கள் (Haematopinus suis - Lice) :** இவை இரத்தத்தை உறிஞ்சும் பெரிய பேன்கள். தோல் எரிச்சல் மற்றும் அரிப்பை உண்டாக்குகின்றன. இது பன்றிகளின் ஆரோக்கியத்தை வெகுவாகக் குறைக்கும்.

● **அறிகுறிகள் :** பன்றிகள் தொடர்ந்து அரிப்பு, அமைதியின்மை, தோல் தடிப்பு, மற்றும் முடி உதிர்தல் போன்ற அறிகுறிகளைக் காட்டும். பேன் கடித்த இடங்கள் சிவந்து, அரிப்பு காரணமாக

புண்ணாகலாம். பேன் தொல்லையால் பன்றிகளின் வளர்ச்சி விகிதம் (Weight gain) குறையும். மேலும், இரத்த சோகை மற்றும் தோல் நோய்கள் ஏற்படலாம்.

● **பரவும் முறை :** இந்த பேன்கள் ஒரு பன்றியிலிருந்து மற்றொரு பன்றிக்கு நேரடியாகவும், அசுத்தமான பண்ணை உபகரணங்கள் மூலமாகவும் பரவுகின்றன

● **சிகிச்சை :** ஐவர்மெக்டின் (Ivermectin) ஊசி மூலம் பேன் தொல்லையை திறம்பட கட்டுப்படுத்தலாம். மந்தையில் உள்ள அனைத்து பன்றிகளுக்கும் ஒரே நேரத்தில் சிகிச்சை அளிப்பது முக்கியம்.

**ஓரணு ஒட்டுண்ணிகள் (Protozoans)**

பன்றிகளில் காணப்படும் ஓரணு ஒட்டுண்ணிகள் பெரும்பாலும் குடல் சார்ந்த பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. பாலாண்டிடியம் கோலை, கிரிப்டோஸ்போரிடியம், எமிரியா மற்றும் ஜியார்டியா போன்றவை மிக முக்கியமானவை. இவை வயிற்றுப்போக்கு, எடை இழப்பு மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டை உண்டாக்கி, பண்ணை பொருளாதாரத்தை பாதிக்கின்றன.

**பன்றிகளில் காணப்படும் ஓரணு ஒட்டுண்ணிகள்**

● **பலன்டிடியம் கோலி (Balantidium coli) :** இது பன்றிகளின் பெருங்குடலில் வாழும் ஒரு முக்கிய ஒட்டுண்ணி. இது பன்றிகளுக்கு கடுமையான வயிற்றுப்போக்கை (னுயைசசாநய) உண்டாக்கும்.

● **கிரிப்டோஸ்போரிடியம் (Cryptosporidium spp.) :** இது குடற்பகுதியை பாதித்து, இளம் பன்றிகளுக்கு வயிற்றுப்போக்கை ஏற்படுத்தும்.

**ஐமேரியா (Eimeria spp.) :** இவை குடலில் தங்கி, காக்சிடியோசிஸ் (Coccidiosis) எனப்படும் நோயை உண்டாக்கி பன்றிகளின் வளர்ச்சியை தடுக்கின்றன. பன்றிகளில் காக்சிடியோசிஸ் (Coccidiosis) என்பது முக்கியமாக 7 - 21 நாட்கள் வயதுடைய பன்றிக் குட்டிகளைத் தாக்கும் ஒரு ஓரணு ஒட்டுண்ணி நோயாகும். இது ஐசோஸ்போரா சூயிஸ் (Isospora suis) என்ற ஓரணு ஒட்டுண்ணியால் ஏற்படுகிறது. இது குடல் சுவரைச் சேதப்படுத்தி கடுமையான வயிற்றுப்போக்கு (diarrhoea), வளர்ச்சித் தேக்கம் மற்றும் பன்றிக் குட்டிகளில் 90% பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**முக்கிய அறிகுறிகள்**

● **வயிற்றுப்போக்கு :** 10 - 20 நாட்கள் வயதுள்ள குட்டிகளில் வெண்மை அல்லது மஞ்சள் நிற, திரவத்தன்மையுடைய மலம், இது

3-4 நாட்கள் நீடிக்கும்.

● **வளர்ச்சித் தேக்கம் :** குட்டிகள் எடை இழப்பு மற்றும் வளர்ச்சி குறைபாடு அடைதல்.

● **நீர்ச்சத்து குறைபாடு :** வயிற்றுப்போக்கினால் உடல் மெலிதல்

**ஜியார்டியா (Giardia spp.) :** இது குடல் உறிஞ்சிகளை பாதித்து, சத்துக்களை உறிஞ்சுவதைத் தடுக்கிறது.

**பாதிப்புகள் மற்றும் தடுப்பு முறைகள்**

● **அறிகுறிகள் :** வயிற்றுப்போக்கு, காய்ச்சல், பசியின்மை, எடை இழப்பு.

● **தடுப்பு :** பன்றி கொட்டகைகளை சுத்தமாக வைத்திருத்தல், உணவிலும் நீரிலும் மலம் கலக்காமல் பார்த்துக் கொள்ளுதல்.

பன்றி வளர்ப்பில், இந்த ஒட்டுண்ணிகள் பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகின்றன, எனவே தடுப்பு மற்றும் சரியான நேரத்தில் சிகிச்சை அளிப்பது மிகவும் அவசியம்.

தகவல் : ***முனைவர் ர.வேலுசாமி, இணைப் பேராசிரியர், கால்நடை ஒட்டுண்ணியியல் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் - 637 002.***

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

